
ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; அடுத்த மழை காலத்திற்குள் சென்னை சாலைகள் எல்லாம் தேசிய நெடுஞ்சாலை தரத்தில் இருக்கும்ன்னு அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளாரே தெரியுமா?

போண்டி : ஆமாய்யா; எவ்வளவு வேகமாக செய்யப் போறாங்களோ இல்லியோ? இந்த மழை காலத்தில் ரோடு அப்படியே இருக்கப் போகுதுன்னு சொல்லாம சொல்லி இருக்காங்கன்னுதான் நான் நினைக்கிறேன். ஓட்டுப் போட்ட மக்கள்தான் பாவம்.

மேகதாது அணை: தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு

நாட்டின் சட்டதிட்டங்கள் தெரியுமா?

கர்நாடக முதல்வர் டி.கே.சிவக்குமார் கேள்வி!

பெங்களூரு, நவ. 11 - மேகதாதுவில் அணை கட்ட யாரிடமும் அனுமதி வாங்க தேவையில்லை என்று கர்நாடக முதல்வர் டி.கே. சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் செய்தியாளர்களைச் சந்தித்த அம்மாநில முதலமைச்சர் டி.கே.சிவக்குமார், "தமிழ்நாட்டின் முதலமைச்சருக்கு நாட்டின் சட்டதிட்டங்கள் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். மேகதாது அணை கட்டுவதற்காக யாரிடமும் அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை. கர்நாடகா தனது சொந்த இடத்தில் அணையைக் கட்டிக் கொள்ளலாம் என்று இந்திய உச்ச நீதிமன்றமே அனுமதி அளித்து விட்டது.

இந்த விவகாரத்தில் கர்நாடகா ஒற்றுமையுடன் உள்ளது. கட்சி வேறுபாடுகளைக் கடந்து, பா.ஜ.க. மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (NDA) அனைத்துத் தலைவர்களும் மேகதாட்டு விவகாரத் தில் கர்நாடகாவுக்கு ஆதரவளிக்க ஒப்புக்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சரிடம் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், ஒரு குழுவை அனுப்பி வையுங்கள். இந்த வாய்ப்பை நாங்கள் தவறாகப் பயன்படுத்த மாட்டோம். சண்டையிடுவதற்கோ அல்லது மோதிக்கொள்வதற்கோ இடமே இல்லை. அந்த காலம் முடிந்துவிட்டது. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கிவிட்டது. நாட்டின் சட்டத்தை மதிப்போம். இணைந்து செயல்படுவோம், நீரைப் பகிர்ந்து கொள்வோம். நம்மிடையே உள்ள ஒற்றுமை உணர்வை மேலும் பலப்படுத்துவோம்" எனத் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மாயவரம் கிட்டப்பா
நவம்பர் 11 (1983)



பழம்பெரும் சுயமரியாதை இயக்க வீரராகவும் – மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் நீண்டநாள் நண்பர். தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக மயிலாடுதுறை வட்டாரத்தில் கழகத்தை வளர்த்தவர்.

"நிரந்தரப் பிரிவு" என்னும் முள்ளால் நீ என்னைக் குத்தியதுதான் ஈட்டி முனையைவிடக் கூராக என் இதயத்தைக் கிழித்து விட்டது வலி தாங்க முடியவில்லையடா என் வாஞ்சைமிகு தம்பி" என தலைவர் கலைஞர் எழுதிய இரங்கற்பாவின் ஒரு பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தீபாவளி: ஒரே நாளில் 15 பேர் வெட்டிக் கொலை!

முதல் பக்கத் தொடர்ச்சி!

கஞ்சா மற்றும் மதுபோதையின் ஆதிக்கமும், பட்டாக்கத்திகள் சர்வ சாதாரணமாகப் புழங்குவதும் இந்த வன்முறைகளுக்கு முக்கியக் காரணமாக அமைகிறது.

அரசின் படுதோல்வி

சென்னை பிரியாணி கடையில் அரிவாள் வெட்டு, செங்குன்றத்தில் எஸ்.ஐ. மீது தாக்குதல் முயற்சி, குழந்தைகள் மாயமாவது எனத் தொடர்ச்சியாக அபாய மணிகள் அடித்தும், ஆளும் விஜய் அரசு சட்டம்ஒழுங்கைத் தீவிரமாகக் கையில் எடுக்கவில்லை என்ற விமர்சனம் வலுத்துள்ளது. முதல்வர் உடனடியாகத் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள உள்துறைச் செயலாளர் மற்றும் காவல் துறை டி.ஜி.பி.யை அழைத்து அவசர உயர்நிலைக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். போதைக் கும்பல்களையும் கூலிப்படை ரவுடிகளையும் கூண்டோடு வேட்டையாடி சிறையில் தள்ள கடுமையான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும். இல்லாவிட்டால், பண்டிகை தினங்கள் கூட பாதுகாப்பு இல்லாத பயங்கர நாட்களாகவே மாறி விடும் என்ற அச்சம் மக்கள் மனதில் வேரூன்றிவிடும்.

தி.மு.க. ஐ.டி.விங் கண்டனம்!

இதுதொடர்பாக தி.மு.க. ஐ.டி. விங் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், **ஒரே நாளில் 15 கொலைகள் என்று செய்தி வெளியான அடுத்த கணமே, 15வது கொலையைப் பற்றிய செய்தியும் வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அளவிற்கு தமிழ்நாட்டில் தீபாவளி நன்னாளிலும் கூடச் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

'மாற்றத்தின்' ஆட்சியில் குற்றவாளிகளுக்குப் பயமே இல்லையா என வினவியுள்ள தி.மு.க. ஐ.டி. விங், அரசின் மெத்தனப் போக்கையும், காவல்துறையின் அலட்சியத்தையும் வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவித்துள்ளது. நாடே தீபாவளி திருநாளை கொண்டாடும் நாளில் ஒரே நாளில் 15 படுகொலைகள்! மக்களின் உயிரைப் பாதுகாக்கத் தவறிய இந்த டம்மி அரசின் மெத்தனப் போக்கே இதற்குக் காரணம்! என தெரிவிக்கப்பட்டுள்ளது.

'டம்மி' மாமா நடவடிக்கை எடுப்பாரா?

சிறப்பு உதவி ஆய்வாளர் முதல் சிறுவர்கள் வரை ஒரே நாளில் 15 பேர் வெட்டிக் கொலை! குற்றச் செயல்களைத் தடுக்கத் தவறிய அரசின் அலட்சியமே இந்தத் தீபாவளியைக் 'கொலைத் தீபாவளியாக' மாற்றியிருக்கிறது என்று தெரிவித்துள்ள தி.மு.க. ஐ.டி. விங், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட இனியாவது நடவடிக்கை எடுப்பாரா இந்த டம்மி மாமா? என்று கேள்வி எழுப்பியுள்ளது.

பண்டிகைநாளில் தமிழகத்தில் ஒரே நாளில் 15 கொலைகள்!

சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பதில் தி.மு.க. அரசின் தோல்வியைக் காட்டுகிறது!

பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா கண்டனம்!



சென்னை, நவ. 11 - மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம் எச் ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

பண்டிகை நாளில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஒரே நாளில் பத்து கொலைகள் நிகழ்ந்திருப்பது மிகுந்த அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, தேனி மாவட்டத்தில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலையின் நடுவில் பட்டாசு வெடித்துக் கொண்டிருந்த இளைஞர்களைத் தட்டிக் கேட்ட காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில் குமார் அவர்கள் தாக்கப்பட்டு உயிரிழந்திருப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. காவல்துறையில் பணியாற்றும் அதிகாரிக்கே பாதுகாப்பில்லாத நிலை ஏற்பட்டிருப்பது தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கு நிலை குறித்த மிகப்பெரிய கேள்வியை எழுப்புகிறது.

தேனி காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில் குமார் குடும்பத்தினருக்கு ரூபாய் ஒரு கோடி இழப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

சென்னையில் வியாசர் பாடி, திருச்சி, கடலூர், சிவகங்கை, விருதுநகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்த கொலைச் சம்பவங்களும், சிறிய பிரச்சினைகள்கூட கொலை வெறித் தாக்குதல்களாக மாறிவரும் சமூகச் சூழலை வெளிப்படுத்துகின்றன.

குற்றச் சம்பவங்கள் நிகழ்ந்த பின்னர் இழப்பீடு அறிவிப்பதும், கைது நடவடிக்கைகளை மேற் கொள்வதும் மட்டுமே அரசின் கடமையாகிவிட முடியாது. குற்றங்கள் நிகழாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், காவல்துறையின் கண்காணிப்பு, போதைப்பொருள் மற்றும் மதுபோதையால் ஏற்படும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தல் ஆகியவற்றில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

காவல்துறையினரின் பாதுகாப்பையும் பொது மக்களின் உயிர் மற்றும் உடைமைகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டியது அரசின் அடிப்படைக் கடமையாகும்.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பதற்கான விரிவான ஆய்வை முதலமைச்சர் மேற்கொள்ள வேண்டும். ஒரே நாளில் நிகழ்ந்த பத்து கொலைச் சம்பவங்கள் குறித்தும், அவற்றுக்கான காரணங்கள் குறித்தும் முழுமையான விசாரணை நடத்தி, குற்றவாளிகள் அனைவருக்கும் சட்டப்படி கடுமையான தண்டனை கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழ்நாடு அமைதியும் பாதுகாப்பும் நிறைந்த மாநிலமாகத் திகழ்வதை உறுதிப்படுத்துவது வெறும் அரசியல் வாக்குறுதியாக இல்லாமல் அரசின் செயல்பாடுகளில் வெளிப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கெருகம்பாக்கம் ஆ.கோ.அரசு - சரோஜா இல்ல மணவிழா வரவேற்பு!

காஞ்சிபுரம், நவ. 11 – காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், கெருகம்பாக்கம் ஊராட்சிமன்ற முன்னாள் தலைவர் ஆ.கோ.அரசு – சரோஜா ஆகியோரின் பேரனும், அ.வெற்றிசெல்வன் – வெ.கல்பனா ஆகியோரின் புதல்வருமான வெ.கவிபாரதிக்கும், மாங்காடு மு. பாண்டியன் – பா.சாந்தி ஆகியோரின் புதல்வி பா.மோனிசா வுக்கும் மணவிழா இன்று (11.11.2026 புதன்கிழமை) காலை 9 மணியளவில் பரணிபுத்தூர், போரூர் – மாங்காடு சாலையில் உள்ள சக்தி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்பு நேற்று (10.11.2026 – செவ்வாய்) மாலை 6 மணியளவில் நடைபெற்றது,

இம்மணவிழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சென்னை மேற்கு மாவட்டச் செயலா ளர் நே.சிற்றரசு, ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, ஏ.வந்தே மாதரம், ப.குணாளன், என்.சந்திரன், டி.பாபு, இ.மணி, சரஸ்வதி மனோகரன், உமா மகேஸ்வரி, வந்தேமாதரம், கோ.சத்தியமூர்த்தி, எஸ்.ஜபருல்லா, எம்.கே.டி. கார்த்திக், அ.தமிழ் மாறன், கோல்டு டி. பிரகாஷ், பேராசிரியர் எல்.பிரபு, சாய் ஜெய் கார்த்தி பாரதி, எம்.எஸ். கே. இப்ராகிம், கே.எத்திராஜ், எம். ஆர். சீனிவாசன், எஸ்.சதீஷ், இரா. பாஸ்கர், ஆர்.டி.பூபாலன்,

வீ.விஜயகுமார், டி.கே.கமலக் கண்ணன், கோ.ஜானகிராமன், ப.ராமமூர்த்தி, கே.மணி கண்டன், து.சுந்தர், கே.வசீகரன், பொன். ஜீவா, பூங்கொடி அரசு, எஸ்.ராஜா தேசிங்கு, எக்.சந்தானம், பா. ராஜேந்திரன், எஸ்.கே. துளசிங்கம், தி.க. பாஸ்கரன், டி.எஸ்.எம்.ஜெயகரன், டி.ஆர்.சாரதி பெரிய நாயகம், ப.குமரவேலு, சுலைமான் சையத், தமிழரசி சுரேஷ், பரத்ராஜ், வே.பாலாஜி, சு.ஜனார்த்தனன், எம். ஆர். நவீன்ராஜ், கு.பிரவீன் குமார், ப.கு.தமிழ் வாணன், செ.இமான் கௌதம், செ.அரிபிரகாஷ், ப.சிலம் பரசன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சத்தியவாணிமுத்து அம்மையார்
நவம்பர் 11 (1999)



தி.மு.க. தொடங்கப்பட்ட காலம் முதல் முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர்.

தி.மு.கழக ஆதிதிராவிட நல உரிமைப் பிரிவுத் தலைவராகவும் – மத்திய அமைச்சராகவும் – பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் தலைமையிலான அரசில் அமைச்சராகவும் பணியாற்றியவர்.

தன்னை சுயமரியாதைக் கொள்கைகளுக்கு முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தமிழகம் முழுவதும் சூறாவளிப் பிரச்சாரம் செய்தவர்.

"அறிவியக்க வீராங்கனையாகத் திகழ்ந்து அறிவார்ந்த சமுதாயம் காணத் தொண்டாற்றிய அம்மையார்" என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி
நவம்பர் 11 (1989)



தென்னாற்காடு மாவட்டக் கழகச் செயலாளராகவும் – தமிழக சட்டப்பேரவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் தன்மான இயக்கத்தில் ஈடுபாடு உடையவராகி மாணவப் பருவத்தில் சுயமரியாதை கொள்கை பரப்பும் பணியில் ஈடுபட்டவர்.

அறிஞர் அண்ணா அவர்களிடம் பற்று கொண்டு தி.மு.க. துவக்கியநாள் முதல் அயராது பணியாற்றிய அஞ்சாநெஞ்சன்.

"கழகத்தின் வீரவேங்கை, சுயமரியாதைச்சுடர், மாவட்ட தளகர்த்தர், கழக உடன்பிறப்புகளுக்கு அரண்போல் விளங்கிய அடலேறு" என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.